**சுருக்கம்**

பணியமைப்பு – தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணி – உதவி செயற் பொறியாளர்களுக்கு செயற் பொறியாளர்களாக தற்காலிக பதவி உயர்வு வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது..

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3)துறை**

அரசாணை (ப) எண்.249 நாள். 21.05.2010

படிக்கப்பட்டது:

1. அரசாணை(ப) எண் 193, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.5.2009
2. நகராட்சி நிர்வாக ஆணையரின் நேர்முகக் கடிதம் ந.க.எண் 33815/2009/எப்1, நாள் 27.11.2009, 16.2.2010 மற்றும் 10.3.2010.

*****

**ஆணை:**

நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதங்களில், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட, 2008–2009–ம் ஆண்டிற்கான செயற்பொறியாளர்களின் பதவி உயர்விற்கான தேர்ந்தோர் பட்டியலில் இடம் பெற்றிருந்த அனைத்து உதவி செயற்பொறியாளர்களுக்கும் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து 2009–2010 ஆண்டிற்கான செயற்பொறியாளர்களின் பதவி உயர்விற்கு 11 (பதினொன்று) உதவி செயற்பொறியாளர்கள் என காலி பணியிட மதிப்பீடு நிர்ணயம் செய்து அரசின் ஒப்புதலை கோரியுள்ளார்.

2. தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணிகளில், 2009–2010ம் ஆண்டிற்கான செயற்பொறியாளர்களின் பதவி உயர்விற்கான மதிப்பீட்டுக் காலம் (estimation period) 14.3.2010–உடன் முடிவடைந்ததையடுத்து அம்மதிப்பீட்டுக் காலத்தில் ஏற்பட்ட உண்மையான ஏழு காலியிடங்களுக்கு (actual vacancies) உதவி செயற் பொறியாளர்கள் பணியிடத்திலிருந்து செயற் பொறியாளர்களாக தற்காலிக பதவி உயர்வளிக்க முடிவு செய்யப்பட்டது.

3. அதற்கேற்ப, தமிழ்நாடு நகராட்சிப் பணிகளின் பொது விதிகளின் விதி 8(a)–ன்படி கீழ்க்காணும் உதவி செயற் பொறியாளர்களுக்கு தற்காலிகமாக செயற்பொறியாளர்களாக பதவி உயர்வளித்து அரசு ஆணையிடுகிறது.

| வ. எண் | உதவி செயற் பொறியாளர்களின் பெயர் | தற்போது பணியாற்றும் நகராட்சி/பேரூராட்சி |
|---|---|---|
| | திருவாளர்கள் | |
| 1. | ஆர். சின்னதுரை | பேரூராட்சிகள் இயக்குநரகம் |
| 2. | ஜி. கருணாகரன் | அருப்புக்கோட்டை |
| 3. | ஆர். இராஜசேகரன் | புதுக்கோட்டை |
| 4. | ஏ. கனகராஜ் | திருநெல்வேலி மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம். |
| 5. | கே. முருகேசன் | குன்னூர் |
| 6. | எஸ். கண்ணன் | கோயம்புத்தூர் மாநகராட்சி |
| 7. | ஆர். வாசுதேவன் | மயிலாடுதுறை |

4 மேலே பத்தி 3–ல் தற்காலிகமாக பதவி உயர்வளிக்கப்பட்ட மேற்காண் உதவி செயற்பொறியாளர்களின் பெயர்கள் 2010–2011–ம் ஆண்டிற்கான முறையான பட்டியலில் தகுதியின் அடிப்படையில் சேர்க்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நிரஞ்சன் மார்டி,**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–5.
சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர்கள், (நகராட்சி நிர்வாக இயக்குநர் வழிமுறையாக)
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை–108.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
நகல் : மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலர் அவர்களின் தனிச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந 2) துறை, சென்னை–9.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**